
2007
235/
KAN AR

உ

சிவமயம்

இல-1. இலவச வெளியீடு



ஊர்காவற்றுறை

# கணபதீஸ்வரம் சிவன்கோவில்

## ஆலய வரலாறும்
## சிவபெருமான்
## திருமுறை அர்ச்சனையும்

(108 போற்றி)


ஊர்காவற்றுறை
**கணபதீஸ்வரம் சிவன்கோவில்**
**பரிபாலனஸ்தர்**
9-1-1963

ARCHIVES
11781

உ

சிவமயம்

இல-1. இலவச வெளியீடு



ஊர்காவற்றுறை

# கணபதீஸ்வரம் சிவன்கோவில்

## ஆலய வரலாறும்

## சிவபெருமான்

## திருமுறை அர்ச்சனையும்

(108 போற்றி)

ஊர்காவற்றுறை

கணபதீஸ்வரம் சிவன்கோவில்

9-1-1963 பரிபாலனஸ்தர்

111781

111781

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

நறைகொண்ட மலர் தூவி
யிறையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார்
முட்டாமே பணிசெய்ய
சிறைகொண்ட வண்டறையும்
செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான்
கணபதீச்சுரத்தானே.

திருச்சிற்றம்பலம்


சிவாய நம வென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை.

அன்பே சிவம்

உ

சிவமயம்

"என்கடன் பணிசெய்து கிடப்பதே"



கணபதீஸ்வரம், சிவன் கோவில் ஸ்தாபகர்

பிரம்மஸ்ரீ பொ. கணபதிஐயர்

௨

## கணபதீஸ்வரம்
# சிவாலய வரலாறு

எந்நாட்டவர்க்கும் இறைவனும் சிவனெனும் நாமம் தனக்கே உடைய எல்லாம் வல்ல ஈசன் யாம் உய்ய ஆட் கொண்டருளும் பொருட்டு திருவருள் பாலிக்கும் சிவஸ்தலங்கள் ஈழத்திரு நாட்டிலும் பலவுள. அவற்றுள் ஊர் காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன் கோவிலும் சிறப்பு மிக்க தலமாகும்.

வீணாகானபுரமெனும் சிறப்புப் பெயர் பொருந்திய யாழ்ப்பாணமாவட் டத்தில் துறைமுகங்கள் பல காணப் படுகின்றன. அவற்றுள் விசேடமாக ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை,

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, போன்ற துறைமுகங்கள் சரித்திர முக்கியத்துவம் பெற்றவையாகும். இவற்றுள் இயற்கை வளம் பொருந்திய துறைமுகம் ஊர்காவற்றுறைப் பட்டினமேயாகும். யாழ்ப்பாண வீரத்தமிழ் மகனும் பூதத்தம்பி என்பவரால் கட்டப்பெற்ற கடற்கோட்டையும் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தின் பக்கத்திலேயே காணப்படுவது சரித்திர பிரசித்தியாகும். மேற்கூறியகாங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை முதலிய பட்டினங்களில் நம் முன்னோர்களால் சிவன்கோவில் அமைக்கப்பெற்றுள்ளது. ஆனால், ஊர்காவற்றுறையிலுள்ள சிவாலயம் ஸ்தாபிப்பதற்கு காரண புருடராயிருந்தவர் நம் நாளில் வாழ்ந்த சிவதொண்டரும் சிறந்த பக்திமானும் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் சிவபணிக்கே அர்ப்பணித்த

பெரியார் பிரமஸ்ரீ பொ. கணபதிஐயர் அவர்களேயாவர்.

ஊர்காவற்றுறை, கரம்பன் முதலாக நாரந்தனை, சரவணை, புளியங்கூடல், சுருவில், வேலணை, மண்டைதீவு இறுதியாகச் சூழ்ந்துள்ளது. வேலணைத் தீவுஎன்றும் (லீடன் தீவு என்றும்) கூறுவார்கள். மேற்கூறிய இடங்களில் வசிக்கும் அன்பர்களுக்கு சைவத்தைப் போற்றி வளர்க்கும் இச் சிவாலயம் உறுதுணையாகும். "செயற்கரிய செய்வார் பெரியார்" என்ற வாக்கிற்குக் குறிக்கோளாய் சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாக்கும் பெரும் பயனுடையாராய் எத்தனையோ பிறவிகளில் தாம் செய்து கொண்ட சிவபுண்ணியத்தாலும் அளப்பரிய சாதனையாலும் இச் சிவாலயத்தை ஸ்தாபித்து தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பெரும் பயன்களடைந்

தவர் ஸ்ரீ பொ. கணபதிஐயர் அவர் களே. அவர்களின் இம்மேலான திருத் தொண்டின் புகழ் இம் மண்ணுலகு உள்ளவரை அழியா இடம் பெறும் என்பது திண்ணம்.

இச்சிவாலயம் ஊர்காவற்றுறை பட்டின சபைக்குள், ஊர்காவற்றுறை-சுருவில் பிரதான வீதியில் அமைந்துள் ளது.

1925-ம் ஆண்டு கோயில் கட்டு மான திருப்பணி வேலைகளுக்கு அத்தி வாரமிடப்பட்டு 1928-ம் ஆண்டு ஆனி மாதம் 15-ம் திகதி சுவாதி நட்சத்தி ரத்தில் மகா பிரதிஷ்டை கும்பாபிஷே கம் செய்யப்பெற்றது.

இறைவன் திருநாமம்:

## ஸ்ரீ காசி விஸ்வநாதர்

இறைவி திருநாமம்:

## ஸ்ரீ காசி விசாலாட்சி அம்பாள்

"யாம் உய்ய ஆட்கொண்டருளும்
பொன் மலர்கள் போற்றி"

### நித்திய பூசைகளும் திருவிழாக்களும்

இவ்வாலயத்தில் நாடோறும் வேதாகம முறைப்படி ஐந்துகால பூசைகள் நடைபெறு கின்றன. வருடந்தோறும் ஆனிமாதத்தில் வரும் உத்தர நட்சத்திரத்தில் தீர்த்தத்திரு விழாவும் இதற்கு முன்தினம் தேர்த்திருவிழா வும் மிக்க சிறப்பாக நடைபெறும். புரட்டாதி மாதம் நவராத்திரி விழா, கார்த்திகை மாதம் சோமவாரங்களில் சங்காபிஷேகம், கார்த் திகைத் தீபம். மார்கழி திருவெம்பாவை பூசை. திருவாதிரை விழா, தைப்பூசம், மாசி மாதம் மகா சிவராத்திரி விழா, பங்குனி உத்திரவிழா முதலிய விஷேட திருவிழாக்கள் நடைபெறு கின்றன.

அன்பே சிவம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

1 ஓம் அப்பா போற்றி
,, அரனே ,,
,, அரசே ,,
,, அமுதே ,,
,, அழகே ,,
,, அத்தா ,,
,, அற்புதா ,,
,, அறிவா ,,
,, அம்பலா ,,
10 ,, அரியோய் ,,
,, அருந்தவா ,,
,, அணுவே ,,
,, அண்டா ,,
,, ஆதியே ,,
,, ஆறங்கா ,,
,, ஆரமுதே ,,
,, ஆரணா ,,
,, ஆண்டவா ,,
,, ஆலவாயா ,,
20 ,, ஆரூரா ,,
,, இறைவா ,,

ஓம் இடபா போற்றி
,, இன்பா ,,
,, ஈசா ,,
,, உடையாய் ,,
,, உணர்வே ,,
,, உயிரே ,,
,, ஊழியே ,,
,, எண்ணே ,,
30 ,, எழுத்தே ,,
,, எண்குணா ,,
,, எழிலா ,,
,, எளியா ,,
,, ஏகா ,,
,, ஏழிசையே ,,
,, ஏறூர்ந்தா ,,
,, ஐயா ,,
,, ஒருவா ,,
,, ஒப்பிலா ,,
40 ,, ஒளியே ,,
,, ஒலியே ,,
,, ஓங்காரா ,,
,, கடம்பா ,,
,, கதிரே ,,
,, கதியே ,,
,, கனியே ,,

ஓம் கலையே போற்றி
,, காருண்யா ,,
,, குறியே ,,
50 ,, குருவே ,,
,, குணமே ,,
,, கூத்தா ,,
,, சடையா ,,
,, சங்கரா ,,
,, சதுரா ,,
,, சதாசிவா ,,
,, சிவமே ,,
,, சிறமே ,,
,, சித்தா ,,
60 ,, சீரா ,,
,, சுடரே ,,
,, சுந்தரா ,,
,, செல்வா ,,
,, செங்கணா ,,
,, செம்பொனா ,,
,, சொல்லே ,,
,, ஞாயிறே ,,
,, ஞானமே ,,
,, தமிழே ,,
70 ,, தத்துவா ,,
,, தலைவா ,,

ஓம் தந்தையே போற்றி
,, தாயே ,,
,, தாண்டவா ,,
,, திங்களே ,,
,, திசையே ,,
,, திரிசூலா ,,
,, துணையே ,,
,, தெளிவே ,,
80 ,, தேவதேவே ,,
,, தோழா ,,
,, நமச்சிவாய ,,
,, நண்பா ,,
,, நஞ்சுண்டா ,,
,, நான்மறையா ,,
,, நிறைவே ,,
,, நினைவே ,,
,, நீலகண்டா ,,
,, நெறியே ,,
90 ,, பண்ணே ,,
,, பித்தா ,,
,, புனிதா ,,
,, புராணா ,,
,, பெரியோய் ,,
,, பொருளே ,,
,, பொங்கரவா ,,

ஓம் மணியே போற்றி
,, மதிசூடியே ,,
,, மருந்தே ,,
100 ,, மலையே ,,
,, மஞ்சா ,,
,, மணாளா ,,
,, மெய்யே ,,
,, முகிலே ,,
,, முத்தா ,,
,, முதல்வா ,,
,, வாழ்வே ,,
108 ,, வைப்பே ,,

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட் டவர்க்கும் இறைவா போற்றி.

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

விவேகானந்த
அச்சகம்,
யாழ்ப்பாணம்